## எங்கள் தலைவரை எங்கும் தேட வேண்டாம்! அவர் எல்லாத் திட்டங்களிலும் இருக்கிறார்!

# கண்ணீர் வடிக்கும் விவசாயிகளுக்கு - எதுவுமே இல்லாத கானல் நீர் பட்ஜெட்!

## சட்டப்பேரவையில் — விளாத்திகுளம் ஜி.வி.மார்க்கண்டேயன் சாடல்!

**சென்னை, ஆக.9-**

**சட்டப் பேரவையில், நேற்று முன் தினம் (7.8.2026) நிதி மற்றும் வேளாண் துறை நிதி நிலை அறிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசியவிளாத்திகுளம் தொகுதி கழக உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன் "எங்கள் தலைவரை ஆட்சியாளர்கள் எங்கும் தேட வேண்டாம்! அவர் எல்லா இடத்திலும், எல்லா திட்டங்களிலும் இருக்கிறார்! கண்ணீர் வடிக்கும் விவசாயிகளுக்கென எதுவுமே இல்லாத கானல் நீர் பட்ஜெட் இது!" என குறிப்பிட்டார்.**

சட்டப் பேரவையில் அவர் பேசியதாவது:-

முதன்முதலாக இந்திய வரலாற்றில் நம் நாட்டினுடைய முன்னாள் ஜனாதிபதி மரியாதைக்குரிய ராஜேந்திர பிரசாத் அவர்களால் 1952 ஆம் ஆண்டு திருவாளர் அம்பேத்கர் அவர்களால் கொண்டு வரப்பட்ட சட்டம் நிராகரிக்கப்பட்டதற்குப் பிறகு, 1989-ல் முதன்முறை யாக பெண்களுக்கு சொத்துரிமையில் பங்கு, பெண்களுக்கு வேலைவாய்ப்பில் reservation, பெண்களுக்கான மறுமணச் சட்டம் என்று பெண்களினுடைய வாழ்க்கையை இந்திய தேசியத்தில் அவர்களும் இந்த சமூகத்தி னுடைய அங்கமாக ஆக்கிய மாபெரும் புரட்சியாளர் 6 முறை தமிழ்நாட்டை ஆண்ட கலைஞர் அவர்களினுடைய நினைவு நாளில், அந்த முத்தமிழறிஞரை வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) உலகமெல்லாம் எதிர்பார்த்த ஒரு மிகப் பெரிய விஷயம் இரண்டாவது உலகப் போர். அதற்குப் பிறகு அதைப் போன்ற ஒரு போர் நடைபெற்றதில்லை. எல்லோரும் பேசப்படுகின்ற ஒரு போர் அடால்ஃப் ஹிட்லர். உலகமெல்லாம் அழிக்கப்பட்டுவிடுமோ, இந்த மனித இனம் அடிமைப்பட்டுவிடுமோ, உலகத்தை சூரியனே மறையாத பேரரசாக பார்த்த அந்த இங்கிலாந்து நாட்டு மக்கள் அடிமைப்பட்டு விடுவோமோ என்று அச்சத்தோடு இருந்தபோது, அந்த இரண்டாவது உலகப்போரை declare செய்து, அனைத்து மக்களுக்கும் ஒரு நிம்மதியைக் கொடுத்தவர் Winston Churchill.

**யாராலும் தளபதியைப் போல் திட்டங்களை தரமுடியாது!**

அந்த Winston Churchill அவர்கள் 1945-ல் உலகப் போர் முடிந்ததற்குப் பிறகு, நடைபெற்ற தேர்தலில், கிளமெண்ட் அட்லீ அவர்கள், ஒரு barrister. அவர் ஒரு பெரிய நிபுணர். அவர் வெற்றி பெற்றுவிட்டார். அந்த coalition government-ல் துணைப் பிரதமராக இருந்தவர். அப்போது கிளமெண்ட் அட்லீ அவர்களிடம் ஒரு கேள்வி கேட்கப்பட்டது. இவ்வளவு பெரிய மாபெரும் தலைவரை, உலகமெலாம் உச்சரித்த அந்த Winston Churchill-ஐ, ஒரு பெரிய orator-ஐ நீங்கள் வீழ்த்தி விட்டீர்களே, நீங்கள் தான் இந்த உலகத்தினுடைய கதாநாயகன் என்று பத்திரிகைகள் கேள்வி கேட்கிறபோது, கிளமெண்ட் அட்லீ அவர்கள் சொன்ன வார்த்தையை இந்த அவையிலே நினைவுபடுத்த நான் கடமைப்பட்டிருக்கிறேன். நான் ஜனநாயகத்தில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற சாதாரண மனிதன். Winston Churchill ஒரு மகாபுருஷர். அந்தவகையில் தெய்வத்திற்கு ஒப்பாகக்கூடிய மாபெரும் தலைவர் Winston Churchill.

அவருடைய சாதனையை தேர்தலில் வெற்றி பெற்ற நான் எந்த இடத்திலும் பெற முடியாது என்று சொன்ன கிளமென்ட் அட்லீ அவர்களுடைய வார்த்தையை நினைவு கூர்ந்து இந்திய ஜனநாயக வரலாற்றில், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என்ற மகா புருஷரை, (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அவதாரப் புருஷரை, யாராலும், எந்த இடத்திலும் தேட முடியாத அளவிற்கு மரியாதைக்குரிய நம்முடைய முதல்வர் அவர்கள், கிண்டி யினுடைய மெட்ரோ பாலத்தை சென்று பார்த்தாலும், நம்முடைய மெட்ரோ இரயிலில் சென்று பார்த்தாலும், கோயம்பேடு பேருந்து நிலை யத்தில் பார்த்தாலும், இந்த நாட்டின் எந்தத் திட்டங்களில் பார்த்தாலும் அதில் தமிழக வரலாற்றில், இந்திய வரலாற்றில் இத்தலைவனைப் போன்று யாரும் திட்டம் கொடுக்க முடியாது என்று தெய்வத்தை யாராவது பார்த்திருக்கிறீர்களா என்று கேட்டால், அணுவிலும் இருப்பார், தூணிலும் இருப்பார், துரும்பிலும் இருப்பார் என்றுதான் இந்துவும் சொல்கிறது, இஸ்லாமியமும் சொல்கிறது, கிறிஸ்தவமும் சொல்கிறது, வைணவமும் சொல்கிறது, சைவமும் சொல்கிறது.

அதைப்போன்றுதான், தமிழ்நாட்டினுடைய அரசியல் தலைவன், உலகத் தலைவருக்கு ஒப்பான முத்துவேல் கருணாநிதியை எங்கும் தேட வேண்டாம், அவர் எல்லா இடத்திலும் இருப்பார் என்பதை நினைவுகூர்ந்து,

அச்சமில்லை அச்சமில்லை அச்ச
மென்ப தில்லையே
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற
போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்ச
மென்பதில்லையே!

என்ற முண்டாசுக் கவிஞன் பாரதியினுடைய வரியை இன்றளவும் நினைவு படுத்திக் கொண்டிருக்கிற, எங்களுடைய இளைஞர்களின் வழிகாட்டி, இந்தத் தமிழகத்திற்கு வழிகாட்டக்கூடிய நட்சத்திரம், எங்கள் கட்சியின் தலைவர், எதிர்க்கட்சித் தலைவர், எங்களுடைய அவைத் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த அவையில் என்னை ஒவ்வொரு முறையும் பக்குவப்படுத்திக் கொண்டு, வார்த்தைகள் பேசுகிறபோதும், படிக்கின்றபோதும், இந்த அவைக்கு நான் வருகிறபோதும், எவ்வாறு பக்குவமாக நடந்துகொள்ள வேண்டுமென்று ஒரு தாயுள்ளத்தோடும், தந்தையுள்ளத்தோடும் என்னை அரவணைத்துக் கொண்டிருக்கிற எங்கள் அவைத் துணைத் தலைவர் கே.என். நேரு அவர்களையும், எங்களுடைய கொறடா மற்றும் முன்னணித் தலைவர்களையும், தமிழ்நாடு முதலமைச்சர், அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், இங்கே அவையின் மாடத்தில் இருக்கிறவர்கள் அத்தனை பேருக்கும், என்னைத் தேர்தலில் வெற்றி பெறச்செய்த, மிகப்பெரிய ஒரு சரித்திரத் தலைவர், பெரிய பெண்ணியவாதி, பெரியாருடைய செயலை இன்றும் வழிநடத்திக் கொண்டிருக்கிற, ஒரு தாய்க்கோழியைப் போன்று பாது காத்துக் கொண்டிருக்கிற, எங்கள் கழகத்தின் துணைப் பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி அவர்கள், எங்கள் மாவட்டத்தினுடைய மாவட்டக் கழகச் செயலாளர் மாண்பமை முன்னாள் அமைச்சர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள், அனிதா R. ராதாகிருஷ்ணன் அவர்கள், கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் எங்கள் தொகுதியின் வாக்காளப் பெருமக்கள், கழக உடன்பிறப்புகள் ஆகிய அனைவருக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கானல் நீர் பட்ஜெட்!**

இந்த budget-ல் நானும் தேடிப் பார்க்கிறேன். முன்வரிசையில் இருக்கக்கூடிய மரியாதைக்குரிய அமைச்சர்களுடைய புத்தகங் களின் பக்கங்கள், மேல் அட்டைப் பக்கம் மிக அருமையாக இருந்தது. அதில் தேடிப் பார்க்கிறேன். முதலமைச்சர் அவர்களையும் பார்க்கிறேன், சட்டமன்ற உறுப்பினர்களையும் பார்க்கிறேன், ஆளுங்கட்சி அமைச்சர் அவர்களையும் பார்க்கிறேன். இருக்கிறதைப் போன்று தெரிகிறது, ஆனால் என் கண்ணுக்குப் புலப்பட மறுக்கிறது. இப்படித்தான், இருக்கிறது இருக்கிறது என்று தேடிப் போய்ப் பார்க்கிறபோது, அதற்குப் பேர் கானல் நீர் என்று சொல்வார்கள். அதைப்போன்றுதான் இந்த budget. ஏற்கெனவே நாங்கள் என்ன திட்டங்களையெல்லாம் இங்கு கொண்டுவந்திருக்கிறோம்? நிதி அமைச்சர் அவர்கள் அழகாகச் சொன்னார்கள். எங்கள் முன்னாள் நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் மிக அருமையான கருத்துக்களை நாங்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிற்கு சொல்லியிருக்கிறார். நாங்களும் நீங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவிற்குதான் என்னுடைய வாதத்தை நான் வைக்க விரும்புகிறேன். எங்களுடைய திட்டங்கள் அத்தனையையும் நீங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறீர்கள். அதற்காக நாங்கள் சந்தோஷப்படுகிறோம். உங்களுடைய Agriculture Minister, உழவர் பெருமக்களுக்கான இந்தத் திட்டத்தை இந்த பட்ஜெட்டில் கொடுத்தார்.



"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம்
அதனால்
உழந்தும் உழவே தலை"

என்ற வள்ளுவனுடைய வாக்கிற்கேற்ப உழவுத் தொழிலுக்குப் பின்னால் தான் அனைத்துத் தொழில்களுமே செல்கின்றன. அந்த அளவிற்கு உழவுத் தொழிலில் எவ்வளவு சிறப்புகளை இந்த ஆட்சி கொண்டுவந்திருக்கிறது என்பதை உங்களுடைய budget பக்கங்களையெல்லாம் வரிவிடாமல் நான் படித்துப் பார்த்தேன். அதில் எங்களுடைய முன்னாள் அமைச்சர் எம்.ஆர்.கே. அவர்கள் நம்முடைய வேளாண்மை பட்ஜெட்டில் நுண்ணீர்ப் பாசனம் என்று சொல்லி வாசித்திருக்கிறார். அவருடைய பக்கத்தையும் எடுத்துப் பார்த்தேன். 1183 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். அதனால் 3 இலட்சம் ஏக்கர் பாசனப் பரப்பளவு பயன்பெறும் என்று அதில் சொல்லியிருக்கிறார். ஆனால், உங்களுடைய பட்ஜெட்டில் 735 கோடி ரூபாய் அதற்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறீர்கள். ஒன்றில் குறையும், ஒன்றில் கூடும். அதில், நீங்கள் துளித் துளித் தண்ணீர் திட்டம், நுண்ணீர்ப் பாசனம்-துளித் துளி, அது என்னவென்று பார்த்தேன். அவர் என்ன சொல்லியிருக்கிறார், இவர் என்ன சொல்லியிருக்கிறார், எப்படி derivate செய்வது, எப்படி comparison செய்வது என்று பார்த்தேன். அவர் சொன்ன விஷயம் drip irrigation, tube well irrigation, sprinkler irrigation, sprayer irrigation. இதுதான் நுண்ணீர்ப் பாசனம். இவர்கள் இதனை 'துளித் துளியாய்' என்று சொன்னால், வித்தியாசமாக இருக்குமோ என்று பார்த்தால், அதே விஷயம்தான் அதிலும் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஒரு இலட்சம் ஏக்கர் மட்டும் தான் அதில் குறைவாக இருக்கிறது. வேறு ஒன்றுமில்லை.

அடுத்து, பனை பாதுகாப்பு இயக்கம் என்று நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். முன்னாள் அமைச்சர் கொடுத்திருப்பது பனை மேம்பாட்டு இயக்கம். ஏதோ ஒரு பெயர் மாற்றங்கள். எது இருந்தாலும்கூட, இந்த விஷயங்களையெல்லாம் நீங்கள் எடுத்துக் கொண்டீர்கள். நான் ஏன் main budget-க்குப் போகாமல், agriculture budget-க்குப் போகிறேன் என்றால், ஒரு விஷயத்தை நீங்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

**சலுகைகள் எதுவும் இல்லை!**

அமைச்சர் அவர்கள் 10 கோடி ரூபாய் மண்புழு உரம் தயார் செய்கிற Capital Expenditure-க்காக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். அதே Capital Expenditure-ஐ மண்புழு உரம் தயார் செய்வதற்காக கடந்த ஆட்சியிலும் ஒதுக்கியிருக்கிறார்கள். நான் கேட்கிறேன், மாற்றத்திற்கான அரசு என்று நீங்கள் சொன்னீர்கள், இந்த நாடு எவ்வளவோ canal irrigation எவ்வளவோ dam irrigation, WRD tank irrigation, tube well irrigation என்று பல்வேறு irrigation இருக்கிறது. ஆனால், எங்கள் ஊரில் rainfed irrigation. முன்னாள் நிதியமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களினுடைய ஊரில் rainfed irrigation. எங்கள் ஊரில் நாங்கள் எந்தவிதமான பயிர்களை விவசாயம் செய்கிறோம். State Equalization Fund-ல் irrigation இருக்கிறவர்களுக்கு என்ன கொடுக்கிறீர்கள் எங்களுக்கு என்ன கொடுக்கப்போகிறீர்கள் என்று ஒரு equality-ஆக, எங்களுக்கு ஏதேனும் சலுகைகள் செய்து கொடுத்திருக்கிறீர்களா என்று உங்களுடைய பட்ஜெட்டில் பார்த்தேன். ஒன்றுமே இல்லை.

நான் மண்புழு உரம் குறித்துப் பேசுவதற்கு வருகிறேன். 1 ton DAP-க்கு subsidy மட்டும் 63 ஆயிரம் ரூபாய். 1 ton Urea-க்கு subsidy 35,000 ரூபாயிலிருந்து 37,000 ரூபாய் வரை இருக்கிறது. நான் கேட்கிறேன். மாடு மேய்க்கிறவர்கள், ஆடு மேய்க்கிறவர்கள், கோழி வைத்திருப்பவர்கள், எங்களுடைய நேரு அண்ணன் அவர்கள் போன்று, மாடுகளை வைத்து அதனுடைய உரத்தை பயன்படுத்தி விவசாயம் செய்கிறவர்கள், இவர்கள் எல்லாம் தயார் செய்கிற இந்த உரத்திற்கு ஏதாவது subsidies நீங்கள் அறிவித்திருக்கிறீர்களா, இவர்களுக்கு ஏதாவது உதவி செய்திருப்பீர்களா என்று உங்களுடைய பட்ஜெட்டில் பார்த்தேன். மாற்றங்களைக் கொடுக்கவேண்டும் என்றுதான் நீங்கள் சொல்லியிருக்கிறீர்களே தவிர எந்த மாற்றமும் இல்லை.

இங்கு இருக்கக்கூடிய மாடித்தோட்டம் அங்கு இருக்கக்கூடிய பூந்தோட்டமாக இருக்கிறது. இங்கு இருக்கக்கூடிய Avocado பழம் அங்கு இருக்கக்கூடிய butter fruit ஆக இருக்கிறது. இந்தப் பெயர் மாற்றம் மட்டும்தான் உங்களிடம் இருக்கிறது. மக்கள் எதிர்பார்த்தார்கள். கடந்த முறை, எங்கள் ஆட்சி நிறைவுபெறக்கூடிய நேரத்தில் நான் இதே அவையில் கேட்டேன். State Equalization Fund-ல் 10,000 கோடி ரூபாய் வானம் பார்த்த பூமியில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இந்த அரசு அடுத்த முறை ஆட்சிப் பொறுப்புக்கு வந்து கொடுக்க வேண்டுமென்று நினைத்தேன். மக்கள் எங்களுக்கு கொடுக்கவில்லை. நீங்கள், விவசாயக் கடனை நாங்கள் முழுமையாக தள்ளுபடி செய்வோம். நெல்லுக்கு ஆதார விலையாக 3,500 ரூபாய் கொடுப்போம், கரும்புக்கு ஆதார விலையாக 4,500 ரூபாய் கொடுப்போம். குதிரைவாலி, தினை, வரகு, பனிவரகு போன்ற minor millets-க்கெல்லாம் நாங்கள் subsidies தொகை வழங்குவோம். pulses-க்கு இரண்டு மடங்கு விலை கொடுப்போம்.

**திராவிட மாடல் ஆட்சியில் ரூ.24 ஆயிரம் கோடி கடன் தள்ளுபடி!**

மக்காச்சோளத்திற்கு quintal-க்கு 500 ரூபாய் தொகை வழங்குவோம் என்று வரி வரியாக உங்களுடைய 317 கோரிக்கைகளில் எங்கள் பகுதியில் பார்த்திருக்கக்கூடிய விவசாய மக்கள் நீங்கள் இரட்டிப்பாக 100 ஏக்கர் விவசாயம் வைத்தாலும், முதலமைச்சர் அவர்கள் இதற்கு முன்னால் இருக்கிறபோது, நாகப்பட்டினத்தில் பேசியிருக்கிறார். விவசாயி என்றால் ஒரு ஏக்கர் வைத்து விவசாயம் செய்பவரும் விவசாயிதான், (மணியடிக்கப்பெற்றது) 100 ஏக்கரில் விவசாயம் செய்பவரும் விவசாயிதான், எல்லோருக்கும் ஒரே மாதிரிதானே விவசாய கடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்கிற கேள்வியை அவர் வைத்திருக்கிறார். அதனால், முதலமைச்சர் அவர்கள், எங்கள் ஆட்சியில், எங்கள் தானைத் தலைவனுடைய ஆட்சியில், தமிழ்நாடு போற்றுகிற உத்தமத் தலைவனுடைய ஆட்சியில், நீங்கள் தேடுகிறீர்களே, இதயமெல்லாம் நிறைந்திருக்கிற எங்கள் மக்களினுடைய கனவு நாயகன் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுடைய ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) ஏறக்குறைய 24 ஆயிரம் கோடி ரூபாய், 5 ஏக்கர் நிலத்திற்கு தள்ளுபடி, 5 பவுன் தங்க நகைக்கு தள்ளுபடி, சுய உதவிக் குழுக்கள் பெற்றிருக்கிற கடனுக்கு தள்ளுபடி என்று மொத்தம் 24 ஆயிரம் கோடி ரூபாயை நாங்கள் பல்வேறு கடன்களில் வரவு வைத்து தள்ளுபடி செய்திருக்கிறோம். நீங்கள் அதையும் தாண்டி 50 ஆயிரம் கோடி தள்ளுபடி செய்வீர்கள் என்று எதிர்பார்த்தார்கள். மானாவாரி நிலங்களுக்கு மார்க்கண்டேயன் என்ன 10,000 ரூபாய் கேட்பது, அன்பு சகோதரர் விஜய் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்தால், அவர் 20,000 ரூபாய் மானாவாரி நிலங்களுக்கு கொடுப்பார் என்று மக்கள் எதிர்பார்த்தார்கள். ஆனால், விவசாயிகள் எல்லாம் இப்போது கண்ணீர் வடித்துக்கொண்டிருக்கிறார்கள். விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இந்தத் திட்டத்தில் ஏதாவது கிடைக்குமென்று பார்த்தோம். எதுவுமே இல்லை. பட்ஜெட் இதோடு முடிந்துவிட வில்லை.

நீங்கள் கருணை உள்ளத்தோடு கணக்குப் பார்க்க வேண்டாம். தனி நபருடைய கடனில்தான் உங்கள் கண் இருக்கிறது. 1 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய், ஒவ்வொரு தனி மனிதனுடைய கடனை தங்கம் தென்னரசு அவர்கள் அவர்களுடைய வீட்டிற்கு கொண்டு சென்றுவிடவில்லை. திருச்சியிலே பஞ்சப்பூர் பேருந்து நிலையத்தை நீங்கள் பார்த்தால் center city Trichy (மேசையைத் தட்டும் ஒலி) பார்க்கிறவர்கள் எல்லாம் வியக்கிறார்கள். கேளம்பாக்கம் பேருந்து நிலையத்தை வியக்கிறார்கள். கிண்டி பாலத்தை வியக்கிறார்கள். மருத்துவக் கல்லூரிகளை அ.தி.மு.க.-வினர் கொண்டுவந்தார்கள் அவர்களையும் நாங்கள் ஆதரிக்கிறோம். நாங்களும் கொண்டு வந்திருக்கிறோம் எங்களையும் ஆதரிக்கிறோம்.

இவையெல்லாம் development, educational development, medical development, social development. இந்த Index-க்காகத்தான் இந்தப் பணத்தைச் செலவழித் திருக்கிறோம்; கடன் வாங்குகிறோம். இங்கு வரக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், இங்கு இருக்கக்கூடிய தொழிலதிபர்கள் car வாங்குகிறார்கள். Innova car ரூ.32 முதல் ரூ.37 இலட்சம் வருகிறது. ரூ.37 இலட்சத்திற்கு premium பணம், ரூ.5 இலட்சம் முதல் ரூ.10 இலட்சம் வரை கட்டிவிட்டு என்ன செய்கிறோம்? Car வாங்கிட்டு வருகிறோம். வீட்டு loan வாங்குகிறோம்.-சென்னை இவ்வளவு பெரிய city ஆக develop ஆகியுள்ளது. பாரிஸ் நகரத்து வீதிகளை விட, சென்னை பிரம்மாண்டமாக இருக்கிறது.-அவ்வளவு பெரிய apartments, சேகர்பாபு CMDA அமைச்சராக இருந்திருக்கிறார்கள். Apartments கட்டுபவர்கள் எல்லாம் அவர்களின் சொந்தக் பணத்திலா இருந்திருக்கிறார்கள். கடன் தற்காக வாங்கப்படுகிறது? அது மூலதனச் செலவுக்காக வாங்கப்படுகிறது; ஏழைகளினுடைய கல்விக்காக வாங்கப்படுகிறது. எந்தக் கடனுமே வாங்கமுடியாமல் இருக்கிற அன்றாடம் காய்ச்சியாக இருக்கிற 1 கோடியே 31 இலட்சம் பெண்களுக்கு மாதம் ரூ.1,000 கொடுத்தது.

இடைநிற்றல். 10 ஆம் வகுப்பு, 12 ஆம் வகுப்புடன் நின்றுவிடக் கூடாது. அவர்கள் PG வரை படிக்கட்டும், Ph.D. வரை படித்தாலும் மாதம் உனக்கு ரூ.1,000 தருகிறேன். நீ எவ்வளவு வரை படித்தாலும் தமிழ்ப் புதல்வன், புதுமைப் பெண் திட்டம் (மணியடிக்கப் பெற்றது) எவ்வளவோ திட்டங்களை அள்ளிக் கொடுத்த அந்த நாயகன். அந்த பட்ஜெட் எல்லாம் இங்கு ஏதாவது இருக்குமா?

**பேரவைத் தலைவர்**: 2, 3 நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

**மார்க்கண்டேயன்:** நீங்கள் --என்னுடன் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர் அண்ணன் ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள். அவரைப் போன்று ஒரு பண்பாளராக இருக்க வேண்டும் என்றுதான் நான் நினைத்தேன். சில நேரங்களில் தூத்துக்குடி மண்ணுக்கே இருக்கக்கூடிய வேகம்.

**"கொலைவாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே!"
கொலைவாளினை எடடா, . . .**

கொலைவாளினை எடுக்கின்றேன் என்று சொல்லி என்னை உள்ளே பிடித்துப் போட்டுவிடாதீர்கள். கொஞ்சம் பார்த்துக்கொள்ளுங்கள். (சிரிப்பு)

பாவேந்தன் பாரதிதாசன் அவர்களின் வரிகளை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**"கொலைவாளினை எடடா மிகு
கொடியோர் செயல் அறவே!"**

என்று பாரதிதாசன் அவர்கள் சொன்னார்கள். அந்த பாரதிதாசன்தான் சொன்னார், 'இருட்டு அறையில் உள்ளதடா உலகம்' பூட்டிய இரும்புக் கூண்டின் கதவு உடைக்கப்பட்டது. சிறுத்தையே! உன்னை எலியென இகழ்ந்தவர் மத்தியில்; சிம்புட் பறவையே! சிறகை விரி வெளியில் வா என்று கேட்டார், ஆம் அந்தப்பாளைச்சிறைச்சாலையில்தான், இந்துக்கள், சைவர்கள் காசிக்குச் செல்கிறார்கள், வைணவர்கள் திருப்பதிக்குச் செல்கிறார்கள், கிருஸ்துவர்கள், எங்களுடைய சபாநாயகரைப் போன்று இருக்கிறவர்கள் ஜெருசலேம் செல்கிறார்கள். அங்கிருந்து மெக்காவிற்கு செல்கிறார்கள் இஸ்லாமியர்கள். ஆனால், தி.மு.க.-வினுடைய தொண்டர்கள். . .

நீங்கள் பாரதிதாசனை மதித்திருக்கிறீர்கள். அதனால்தான் சிறைக் கதவுகளுக்குப் பின்னால், மீண்டும் இந்த அவையிலே நான் வந்து பேசுவதற்கான ஒரு பெரும் வாய்ப்பு கிடைத்திருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் தானைத் தலைவன் 1965 ஆம் வருடம் இந்தி எதிர்ப்புப் போராட்டத்திலே 58 நாட்கள் அந்தப் பாளைச் சிறையில் இருந்திருக்கிறார்களே அதைத்தான், (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களுடைய advice எங்களுடைய மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற மிகப்பெரிய வரிகளுக்குச் சொந்தக்காரர் பேரறிஞர் அறிஞர் அண்ணா. பெரியார், பேரறிஞர் அண்ணா முத்தமிழறிஞர் கலைஞர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய மடியில் விளையாடி அரசியல் படித்து மாபெரும் ஆலமரமாக இருக்கிற எங்கள் கட்சியினுடைய தானைத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களைச் சந்திக்கிற போது, மார்க்கண்டேயன் முதலமைச்சர் எது பேசியிருந்தாலும் கூட, நீங்கள் முதல்வர் அவர்களை இவ்வளவு தடிமனான வார்த்தைகளால் பேசியிருக்கக்கூடாது என்பதுதான் என் தலைவர் எனக்கு அறிவுறுத்தினார். (மேசையைத் தட்டும் ஒலி) அதைப் போன்று என்னை சிறைச்சாலையில் பார்க்க வருகிறபோது, எவ்வளவு மாற்று அரசியல் கருத்துகள் இருந்தாலும்கூட எங்கள் எதிர்க்கட்சியினுடைய தலைவர் மிகப்பெரிய போராட்டக்களத்திற்குச் சொந்தக்காரர், ஈட்டியே இதயத்தில் பாய்ந்தாலும் அதை எடுத்துவிட்டு ஓடுகிற வல்லரசுக்குச் சொந்தக்காரர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் என்னை பாளையங்கோட்டைசிறைச்சாலையில் பார்க்கிறபோது, நீங்கள் முதலமைச்சரை இந்தளவிற்கு பேசியிருக்க வேண்டாம் என்பதைத்தான் சொன்னார். எங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி கனிமொழி கருணாநிதி அவர்களும் எவ்வளவு தான் இருந்தாலும்கூட முதலமைச்சர் அவர்கள் பேசியிருந்தால் அதற்கு நாம் அறிவுப்பூர்வமாக பதில் சொல்லவேண்டும். தடிமனான வார்த்தைகளைப் பேசியிருக்கவேண்டாம் என்றுதான் சொன்னார். எங்களுடைய கட்சியின் முதன்மைச் செயலாளர் கே.என். நேரு அவர்களும், கொறடா எ.வ. வேலு ஐயா அவர்களும்கூட நாம் பண்பட்ட அரசியல் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைச் சொன்னார்கள். எங்களுடைய தலைவர்கள் எவ்வளவு மாட்சிமைக்குரியவர்கள் என்பதை இந்த அவையிலே நான் பதிவுசெய்ய விரும்புகிறேன்.

**எனது பேச்சை மறந்து விடுங்கள்!**

அதேநேரத்திலே எங்களுடைய ஊருக்குச் சொந்தக்காரர் என்னுடைய தொகுதியில் பிறந்து வளர்ந்த வீரபாண்டிய கட்டபொம்மன் பிறந்த ஊரிலே நான் பிறந்தவன். அவன் வரி கொடா இயக்கத்திற்கு பிரிட்டிஷ்காரன் தான் ஆட்சிப்பொறுப்பில் இருந்தான். அவன்தான் வரிவசூல் செய்கிறார். அதனாலும்கூட வரியைக்கேட்கும்போது உனக்கு ஏன் வரி கொடுக்கவேண்டும்? எங்கள் குலபெண்களுக்கு மஞ்சள் அரைத்தாயா? என்று கேட்டார். அவர் படையில் இருக்கக்கூடிய வீரன் சுந்தரலிங்கம்தான் முதன்முதல் suicide bomb எங்கள் ஊரில் இருக்கக்கூடிய வ.உ.சிதம்பரனார்தான் பிரிட்டிஷ்காரர்களை எதிர்த்து வணிக கப்பலை நடத்தியிருக்கிறபோது passenger கப்பலையும் நான் நடத்துவேன் என்று கூறிய freedom fighter; போராட்டக்களத்திற்கு சொந்தக்காரர். (மணியடிக்கப் பெற்றது) எங்கள் ஊரில்தான் மனித ஜாதியாக மனிதர்கள்தான் இருக்கமுடியும் என்பதைத் தெரிந்த முண்டாசுக் கவிஞர் பாரதியார். . .

"காக்கை குருவிகள் எந்தன் ஜாதி" என்று சொன்னான். அந்தச் சுற்றுவட்டாரம் முழுவதும் powerful energetic leaders வாழ்ந்த அந்த கரிசல் கந்தக பூமியில் இருக்கிற நான் இந்த அவையினுடைய கதவுகள் பூட்டப்படும் என்று சொன்னபோது, என்னை அறியாமல் வந்த வார்த்தைகளுக்கு நீங்கள் அருள்கூர்ந்து அதை மறந்துவிடவேண்டுமென்று கேட்டு, நிறைவு செய்கிறேன்.

இவ்வாறு பேரவையில் கழக உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் பேசினார்.



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணா நகர் வடக்கு பகுதி, 101 வது வட்டத்தின் அனைத்து பகுதிகளிலும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. வட்டச் செயலாளர் க.கோவிந்தராஜ், வார்டு மாமன்ற உறுப்பினர் மெட்டில்டா கோவிந்தராஜ், வட்டச் செயலாளர் சி.பி.திருமலை முன்னிலையில் மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, தயாநிதி மாறன் எம்.பி, எம்.கே.மோகன், ச.பரமசிவம், கார்த்திக் மோகன், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டனர்.



சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் வடக்கு பகுதி, 146 வது வட்டத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் மற்றும் முன்னாள் வில்லிவாக்கம் ஒன்றியக் கழகச் செயலாளர், முன்னாள் மதுரவாயல் நகர் மன்றத் தலைவர், முன்னாள் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆலப்பாக்கம் கு.சண்முகம் ஆகியோரின் நினைவு நாளை முன்னிட்டு 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கும் விழா மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் தினகரன் சண்முகம் ஏற்பாட்டில் வட்டக் கழகச் செயலாளர் எம்.ரூபன் தலைமையில் பகுதிக் கழகச் செயலாளர், மண்டலக் குழுத் தலைவர் வே.ராஜன் முன்னிலையில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி முத்தமிழ் அறிஞர் கலைஞர் மற்றும் ஆலப்பாக்கம் கு.சண்முகம் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தி 1000 பேருக்கு அறுசுவை உணவு வழங்கினார்.